## வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் - 2015

வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 47(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. விரிவான அறிக்கையொன்றுக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை வாழ்க்கை தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பல்கலைக்கழகத்தின் சேவையிலிருந்து விலகிச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 2005 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 10,400 கூட்டுத்தொகையான விழா மற்றும் விசேட முற்பண கடன் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவு ரூபா 3,054,300 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 25,155 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் ரூபா 3,079,455 தொகையான வீழ்ச்சியொன்று ஏற்பட்டிருந்தது. மீண்டெழும் மானியங்கள் ரூபா 26,385,000 ஆல் அதிகரித்திருந்த போதிலும், ஊழியர் ஊதியம் மற்றும் சேவைகள் செலவினம் முறையே ரூபா 24,323,375 ஆலும் ரூபா 8,213,098 ஆலும் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறை 2013 ஆம் ஆண்டில் போது கருத்திற் கொள்ளக்கூடிய மிகையொன்றாக மாறி மீண்டும் 2014 ஆம் ஆண்டின் போது மிகை கருத்திற் கொள்ளக்கூடியளவில் குறைவடைந்து மீளாய்வாண்டின்போது பற்றாக்குறையொன்றாக மாறியிருந்தது. எனினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை கருத்திற் கொள்ளும்போது 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் அது 14 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப மற்றும் தொழில்கல்வி துறையில் டிப்ளோமா தகைமைகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு உயர் கல்வி சந்தர்ப்பங்கள் வழங்குதல் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. அதன் பிரகாரம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 அல்லது 6 மட்டத்தில் சித்தி பெற்றவர்களுக்கும் மத்திய தரத்திலான தொழில்நுட்ப வல்லுனர்களை உருவாக்கும் தேசிய தொழில் தகைமை (NVQ) அல்லாத

பாடநெறிகளைத் தொடர்ந்த டிப்ளோமாதாரிகளுக்கு பட்டப்படிப்பு தகைமை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்குவது பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும்.

(i) பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு தொழில்கல்விக்கு உரித்து காணப்பட்ட போதிலும், பல்கலைக்கழகத்தினால் பகுதி நேர (வார இறுதி) பட்டப்படிப்பு பாடநெறிகள் கட்டணங்கள் அறவிடப்பட்டு நடாத்தப்படுவதாக அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பகுதி நேர பாடநெறிகளுக்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களிடமிருந்து ஒரு தவணைக்காக ரூபா 10,000 வீதம் மூன்று ஆண்டுகள் நடாத்தப்படும் பட்டப்படிப்பு பாடநெறியொன்றிற்காக ரூபா 60,000 பாடநெறிக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் இரண்டு பீடங்களில் நடாத்தப்படும் 19 பட்டப்படிப்பு பாடநெறிகளிலிருந்து மீளாய்வாண்டில் பணம் அறவிடப்பட்டு 13 பகுதிநேர பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், 6 முழு நேர பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தமையால் முழு நேர பாடநெறிகள் பல்கலைக்கழகத்தின் உயர் இயலளவில் நடாத்தப்படாதிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(ii) பல்கலைக்கழகத்தின் நிரந்தர பதவியணியில் 41 பேர் இருக்கையில் கல்விசார் பதவியணியின் மும்மடங்கு அளவில் அதாவது 139 வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு 8291 கற்பித்தல் மணித்தியாலங்களும் 1236 செய்முறை பயிற்சி மணித்தியாலங்களுக்காக மீளாய்வாண்டில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், 123 பேருக்காக ரூபா 10,392,212 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, அதிகளவில் வெளிவாரி விரிவுரையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படாததுடன் கல்விசார் பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்ட கற்பித்தல் மணித்தியாலங்கள் அளவு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் அவர்களின் செயலாற்றல் தொடர்பாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

(iii) ஆண்டினுள் பல்கலைக்கழகத்திற்கு சேர்க்கப்பட்ட மாணவர்கள் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பிட்ட தகவல்களின் பிரகாரம் முழுநேர பாடநெறிகளுக்காக 134 மாணவர்களும் பகுதி நேர பாட நெறிகளுக்காக 416 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் முழுநேர பாடநெறிகளுக்காக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளும் செயல்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், அதற்கான காரணங்களை இனங்கண்டு தீர்வு காண்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2012-2015 கல்வியாண்டில் பட்டப்படிப்பு பாடநெறிகளுக்கு சேர்க்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பாடநெறிகளைப் பூர்த்தி செய்து பட்டங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் தொடர்பாக மேற்காள்ளப்பட்ட பரிசோதனையின் போது 08 பாடநெறிகளில் மெகாடிரொனிக், பல்ஊடகம் மற்றும் இணையத்தள மற்றும் கல்வி ஆகிய 3 பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களில் 65 சதவீதத்திற்கும் குறைவான சதவீதமானவர்களே பட்டங்களைப் பூர்த்தி செய்தவர்கள் என அவதானிக்கப்பட்டது. மேலும் மெகாடிரோனிக், பல்ஊடகம் மற்றும் இணையத்தள பாடநெறிகளிலிருந்து பாடநெறிகளை விட்டுச் செல்லும் சதவீதம் முறையே 31 சதவீதம் மற்றும் 19 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் முகாமைத்துவத்தினால் மாணவர் பாடநெறிகளை விட்டுச் செல்வதற்கும் பாடநெறிகளை முறைப்படி பூர்த்தி செய்யாமைக்கான விடயங்களை ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்திற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 11 செயற்பாடுகளை செயற்படுத்துவதற்காக திறன் பயிற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (SSDP) கீழ் ரூபா 100.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 3.05 மில்லியனில் ஆண்டினுள் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த கல்வி தரச் சான்றிதழ் பிரிவொன்று தாபித்தல் மற்றும் தரச் சான்றிதழை மேம்படுத்துதல் மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் போன்ற செயற்பாடுகள் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) தொழில்சார் தொழில்நுட்ப கைத்தொழிலின் தேவைப்பாட்டின் பிரகாரம் தற்போது காணப்படும் 20 பாடவிதானங்களை திருத்தம் செய்வதற்கும் 10 புதிய பாடவிதானங்களை அபிவிருத்தி செய்வதற்கும் ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் காணப்படும் 10 பாடவிதானங்கள் திருத்தம் செய்யப்படாமல் இருந்ததுடன், ஒதுக்கப்பட்ட பணத்தில் 50 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் தொழில்சார் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி துறையில் பயிலுனர்களுக்காக தேசிய தொழில் தகைமை 5 ஆவது மட்டத்தினை வழங்குவதற்காக ரூபா 8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 4.7 மில்லியனே அதாவது 59 சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) பட்டப்பின் படிப்பு தகைமைகளை பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக்கழக நிறுவகங்களின் பதவியணியினர் உட்பட வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பதவியணியின் 10 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 14.5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒதுக்கப்பட்ட பணத்தில் 04 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் பட்டப்படிப்பு தகைமைகளை வழங்குவதற்காக ரூபா 11.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(iv) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இத்தேசிய தொழில் தகைமை மதிப்பீட்டாளர்களை பயிற்சியளிப்பதற்காக ரூபா 1.5 மில்லியன் பணம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் தொழில்சார் தொழில்நுட்ப துறையின் 50 பேருக்கும் துறைக்குரிய நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளிலிருந்து 200 வீதமும் மொத்தம் 450 பயிற்சியளிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 1.13 மில்லியன் செலவிடப்பட்டு 219 பேர் மாத்திரம் பயிற்சியளிக்கப்பட்டிருந்தனர்.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 2013/2014 (ii) ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரின் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளை பூர்த்தி செய்த அனைத்து உத்தியோகத்தர்களும் பங்குபற்றிய நிகழ்ச்சிகள் தொடர்பான அறிக்கையொன்றை ஒரு மாதத்திற்குள் நிறுவகத் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டுப் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் அறிக்கைகளை சமர்ப்பிக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன், 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரை 11 உத்தியோகத்தர்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) கல்விப் படிகள் தொடர்பாக திறைசேரியிடமிருந்து மேவுகை அங்கீகாரத்தைப் வழங்குவது நிராகரிக்கப்பட்டிருக்கையில் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை கல்விசார் பதவியணியினருக்காக ரூபா 7,144,313 ஆன கல்விசார் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 4.7 மில்லியன் நிர்மாணக் கிரயத்திலான பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லம் 2010 மே மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தது. மேலும் 2012 நவம்பர் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்த பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக 2015 செப்தம்பர் 08 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 79,570 பெறுமதியான பொருட்கள் கணக்காய்வு திகதியான 2016 மார்ச் 03 ஆந் திகதி அளவிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5.4.2 பிரிவின் பிரகாரம் உதவிப் பதிவாளர் பதவிக்காக தெரிவுசெய்யும் எழுத்துமூல பரீட்சையில் ஆகக்குறைந்த புள்ளிகள் அளவைப் பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தரொருவர் அப்பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.

(ஆ) பல்கலைக்கழகத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள் 41 பேர் இருக்கையிலும் வெற்றிடங்களுக்காக நிரந்தர அடிப்படையில் விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமலும் மீளாய்வாண்டில் 139 வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை vii ஆவது அத்தியாயத்தின் 5.3.2 ஆம் பிரிவின் பிரகாரம் பதவி உயர்வு கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர் இறுதியாக பெற்ற சம்பளம், புதிய சம்பள அளவின் ஆரம்ப சம்பளத்திற்கோ அல்லது சம்பளப் படிமுறையொன்றிற்கு சமமாயின் அவர் அண்மித்த மேல் சம்பள படிநிலையில் வைக்கப்பட வேண்டிய போதிலும், உதவி நூலகர் பதவியை வகித்த உத்தியோகத்தரொருவர் சிரேஷ்ட உதவி நூலகர் பதவி ii ஆம் தரத்திற்கு பதவி உயர்வினைப் பெற்றுக்கொள்ளும் போது அவர் பெற்றுக்கொண்டிருந்த சம்பளத்தைக் கருத்திற்கொள்ளாமல் புதிய சம்பள அளவில் ஆரம்ப சம்பளபடிநிலையில் வைக்கப்பட்டிருந்தார்.

(ஈ) 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 32(1) பிரிவின் பிரகாரம் 60 வயது பூர்த்தியடைந்தமையால் 2009 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வுபெற்ற இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்கள் அதிகாரச்சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் அவ்வாண்டின் நவம்பர் 15 முதல் 2014 ஆகஸ்ட் 06 வரை பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி பதவிகளில் பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டு அவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்குரிய 2 வாகனங்கள் ஒதுக்கப்பட்டு காலப்பகுதியில் எரிபொருள் படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆகஸ்ட் வரை மேற்படி விரிவுரையாளர்களுக்கு எரிபொருள் படிகளாக ரூபா 1,136,218 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், 2005 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு, பல்கலைக்கழகத்தினதும் 05 பல்கலைக்கழக கல்லூரிகளினதும் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உள்ளகக் கணக்காய்வாளர் உட்பட எழுதுனர் தரத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் நிலைத்திருதன்மைக்கு தாக்கமளிக்க கூடிய சட்டம் சார்ந்த சட்டகத்தினுள் செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்று ஸ்தாபிப்பதனை நோக்காகக் கொண்டு ஒட்டுமொத்த செயற்பாடுகளின் செயலாற்றலை ஏற்படுத்துவது முகாமைத்துவத்தின் பிரதான பொறுப்பொன்றாக இருப்பதுடன் அதற்காக ஒத்துழைப்பதற்குத் தேவையான நடைமுறையொன்று தயாரித்து அச்செயற்பாட்டை உள்ளகக் கணக்காய்விற்கு கையளிக்க முடியுமான போதிலும், முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் பல்கலைக்கழகத்தின் கொடுப்பனவுகள் தொடர்பாக முழுமையான கணக்காய்வொன்றினை செய்வதற்கு உள்ளகக் கணக்காய்வாளர்களை பயன்படுத்தியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேவுகை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 12 துறைகளுக்கிடையே ஒரு துறை மாத்திரம் அதாவது நபர்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் பிணைமுறிகளை கணக்கிடல் தொடர்பாக கணக்காய்வு செய்யப்பட்டு 03 அறிக்கைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள 05 பல்கலைக்கழக கல்லூரிகளின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளும் இப்பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அக்கல்லூரிகளுக்காக வேறாக கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 05 கல்லூரிகளில் 03 மாத்திரம் கணக்காய்வு செய்யப்பட்டு அறிக்கைகள் அனுப்பியிருந்த போதிலும், அவ் அறிக்கைகளைப் பரீட்சித்த போது கல்லூரியின் நிதி மற்றும் செயற்பாட்டு துறைகள் மேவுகை செய்யப்படும் வகையில் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்தமை கண்டறியப்பட்டது.

### 5.2 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறை

பல்கலைக்கழகத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக தாபன விதிக்கோவை யொன்றைத் தயரிப்பதற்காக 2014 மே 23 ஆந் திகதி ரூபா 720,000 கிரயத்தில் ஒப்பந்தக்காரரொருவருடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் 2014 நவம்பர் 23 ஆந் திகதி அளவில் குறித்த செயற்பாடு பூர்த்தி செய்யப்பட வேண்டிய பேரிலும், கணக்காய்வு திகதியான 2016 மார்ச் 02 ஆந் திகதியளவிலும் தாபனவிதிக்கோவை தயாரிக்கும் செயற்பாடு பூர்த்தி செய்யப்படாதிருக்கையில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி மதிப்பிடப்பட்ட முழுத்தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.3 ஆம் பிரிவின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்படாமையால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட திருத்திய பாதீடு மீளாய்வாண்டின் நவம்பர் 19 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 13 மூலதன செலவின விடயங்களுக்காக ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 100,000 முதல் 22,250,000 வரையான தொகையில்

அதாவது 3 சதவீதத்திலிருந்து 710 சதவீதம் வரையான வீச்சில் திருத்தம் செய்யப்பட்ட காரணத்தினால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதியக் கட்டுப்பாடு | செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பணம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சொத்துக் கட்டுப்பாடு | முறைப்படி நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படாமை மற்றும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளாமை. |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்தங்களிற்காக கொடுப்பனவு செய்யும் போது முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாமை மற்றும் ஒப்பந்த தாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) பதவியணியினர் கட்டுப்பாடு | பதவியணிக்கு ஆட்சேர்க்கும் போது ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை, பதவி உயர்வு வழங்கும் போது உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமை. |
| (உ) பாடநெறிகள் நடாத்தலும் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடும் | வளங்களை செயற்திறனாக பயன்படுத்தக்கூடிய வகையில் பாடநெறிகள் ஒழுங்குபடுத்தப்படாமை. விரிவுரையாளர்களின் செயலாற்றல் மதிப்பீடு செய்யப்படாமை. |
| (ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு | உரிய ஆய்வொன்றின் பின்னர் மதிப்பீடு தயாரிக்கப்படாமை. |
| (எ) களஞ்சியக் கட்டுப்பாடு | உத்தியோகத்தர்களுக்கு பொருட்கள் வழங்கும் போது முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாமை. |